# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,922/4 — 1970 සැප්තැම්බර් 7 වැනි සඳුද — 1970.9.7

14,922/4 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 7 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 281/3

ம. தே. அ. எண் : சீ. 162/49 (8)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் பீ. பீ. உடகம அவர்களை, தமது கடமைகளுடன் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை, 1970 செத்தெம்பர் 4 ஆம் திகதியிலிருந்து பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுக்கள் அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராக கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1970 செத்தெம்பர் 7.

அதி உத்தமரின் கட்டளைப்படி,
டி. ஜீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

9—576.

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### இலங்கை மத்திய வங்கி

பொது ஐந்தொகை 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதியில் உள்ளபடி

**பொறுப்புக்கள்**

| | ரூபாய்கள் | ரூபாய்கள் |
|---|---|---|
| மூலதனக் கணக்குகள் | | |
| மூலதனம் .. .. | 1,50,00,000 | |
| மிகை .. .. | 5,60,00,000 | |
| | | 7,10,00,000 |
| பொறுப்புக்கள் | | |
| சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயங்கள் | 120,17,99,898 | |
| சுற்றோட்டத்திலுள்ள குத்தி நாணயங்கள் | 7,21,47,503 | |
| | | 127,39,47,401 |
| வைப்புக்கள் | | |
| அரசாங்கம் .. .. | 1,59,05,629 | |
| அரசாங்க முகவராண்மைகளும் நிலையங்களும் .. .. | 24,72,452 | |
| வர்த்தக வங்கிகள் .. .. | 13,40,35,094 | |
| சர்வதேச நிறுவனங்களும், அந்நிய அரசாங்க, அந்நிய வங்கி நிலையங்களும் .. | 59,91,65,764 | |
| ஏனையவை .. .. | 1,19.52,357 | |
| | | 76,35,31,296 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் .. .. | | 37,99,11,613 |
| ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 92,39,96,001 |
| | | 341,23,86,311 |

**இருப்புச் சொத்துக்கள்**

| | ரூபாய்கள் | ரூபாய்கள் |
|---|---|---|
| சர்வதேச ஒதுக்கு நிதிகள் | | |
| வெளிநாட்டிற் பணங்களும் நிலுவைகளும் (இறைசேரி உண்டியல்களுட்பட) | 9.04.95,340 | |
| *அந்நிய அரசாங்கப் பிணைகள் .. | 10,27,94,357 | |
| விசேட எடுப்பனவு உரிமை உடமைகள் .. | 2,16,309 | |
| | | 19,35,06,006 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் | | |
| கடன்களும் முற்பணங்களும் | | |
| ** அரசாங்கத்துக்கு .. .. | 35,21,95,163 | |
| ஏனையவற்றிற்கு .. .. | 26,51,00,000 | |
| அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் .. | 182,14,03,307 | |
| | | 243,86,98,470 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களும் கணக்குகளும் .. .. | | 78,01,81,835 |
| | | 341.23.86.311 |

*அரசாங்க நிலையங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல ரூபாய் 2,22 65,915 முகமதிப்பு பெறுமானத்திலும் 1965 மே 24 இல ரூபாய் 1,05 59,191 முகமதிப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (அத்திகதிகளில இப்பிணைகளின் உத்தேச சந்தைப் பெறுமானங்கள் முறையே ரூபா 1,61,17,365 உம் ரூபா 85,76,453 உம் ஆகும்.) இவற்றிலடங்கா திகதிகளில் அரசாங்கத்தால வெளியிடப்பட்ட ரூபா 1,42,857 முகமதிப்பு பெறுமானம்கொண்ட பிணைகள் 1969 மார்ச் 15 இல் மீளற்குதி பெற்றன வாயினும் அவை இதுவரை மீட்கப்படவில்லை. **சர்வதேச நிதித்தாபனங்களுக்கு இலங்கையில் உறுப்புரிமைக் கட்டணங்களைக் கொடுப்பதற்கெனப் பெற்ற 9,19,95,163 ரூபாக்களைக் கொண்ட விசேட கடன்களை உள்ளடக்கும.

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்.

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

மேலே தரப்பட்டுள்ள ஐந்தொகை, எனது பணிப்பின் கீழ் கணக்குப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. வங்கியினால் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள், பதிவேடுகள் ஆகியவற்றின் படியும், எனக்களிக்கப்பட்ட தகவல், விளக்கங்கள் ஆகியவற்றிற்கிணங்கவும், மேலே காட்டப்பட்டுள்ள ஐந்தொகை, 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் நிலைமையைச் சரிவரக் காட்டுதற்பொருட்டு, முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென நான் கருதுகிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 7 ந் உ.

டி. ஆர். செட்டிநாயக்க,
கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபதி.

9—570

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் எண் 22/70.

**ஐக்கிய இராச்சியம்/இலங்கைக்கடன் 1970 ன் கீழ் வழங்கப்படும் பகிர்வுகளின் கீழ் இறக்குமதிகள்**

(இவ்வறிவித்தலினுல் மேற்கூறிய கடன் ஒப்பந்தத்தின்கீழ் இறக்குமதிகள் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை)

மேற்கூறிய கடன் உடன்படிக்கையின் கீழ் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இறக்குமதிகள் செய்வதற்கு உத்தரவுச்சீட்டுக்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் செயல்முறை மேற்கூறிய கடன் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் பகிர்வுகளின் மேல் கொடுக்கப்படும் இறக்குமதி யுத்தரவுச் சீட்டுகளுக்கு பொருத்தமாகவும் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் செயல்முறைக்கு குறை நிரப்பாகவும் இருக்கும்.

(i) " ஐக்கிய இராச்சியம்/இலங்கைக்கடன் 1970 " என்ற தலைப்பின் கீழ் ஓர் பகிர்வுபெறும் இறக்குமதியாளர் ஐக்கிய இராச்சியத்தி லுள்ள ஓர் அனுப்புமதியாளருடன் இணைக்கப் பேச்சுவார்த்தை நடத்தி அனுப்புமதியாளரினுல் உறுதிப்படுத்தப்பட்ட மாதிரிப் பொருள் அனுப்பு பட்டியல்/ஒப்பந்தம் ஒன்றை 4 பிரதிகளில் பெறுவர். குறிப்பிட்ட பகிர்வின் கீழ் பெறப்படும் வழங்கு பொருள் களின் ஒப்பந்தம் என்று அடையாளம் காட்டும் பொருட்டு பகிர்வுக்கடிதத்தின் தொடர்பு எண்ணும் திகதியும் மாதிரிப் பொருள் அனுப்புபட்டியல்/ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரிப்பொருள் அனுப்புபட்டியல்/ஒப்பந்தத்தில் பொருட்கள் ஐக்கிய இராச்சியமூலம் உடையவை என்று அல்லது எவ்வளவு வீதம் ஐக்கிய இராச்சியமூலம் உடையவை என்று அனுப்புமதி யாளரினுல் சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட மாதிரிப் பொருள் அனுப்புபட்டியல்/ஒப்பந்தத்தின் 3 பிரதிகள் பகிர்வு வழங்கிய அதிகாரிக்கு, அதாவது பொருத்தமானபடி இறக்குமதி ஏற்றுமதிக்கட்டுப்பாட்டு திணைக்களம் அல்லது கைத்தொழில், விஞ்ஞான அமைச்சின் ஒழுங்கு படுத்தல் பிரிவு/கூட்டுத்தாபனப் பிரிவுக்கு அனுப்பப்படல் வேண்டும். அதன்பின் " ஐக்கிய இராச்சிய/இலங்கைக்கடன் 1970 " என்ற தலைப்பின் கீழ் இறக்குமதி யுத்தரவுச்சீட்டு வழங்க இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்தினுல் அல்லது கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் ஒழுங்குபடுத்தல் பிரிவு/கூட்டுத்தாபன பிரிவினுல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) இறக்குமதியாளர், இறக்குமதி யுத்தரவுச் சீட்டு வழங்கப்பட்டதும், இலங்கையிலுள்ள ஒரு வர்த்தக வங்கியுடன் நாணயக்கடிதம் ஒன்றை ஆரம்பிக்க விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வர்த்தக வங்கி ஐக்கிய இராச்சியத்திலுள்ள தனது தொடர் புடைய வங்கியின் ஊடாக அனுப்புமதியாளருக்கு பணக்கொடுப்பனவுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கு தேவைப்படும் சாதன மளிப்புக்கும் ஒழுங்கு செய்யும்.

(iii) " ஐக்கிய இராச்சியம்/இலங்கைக் கடன் 1970 " இன்கீழ் வழங்கப்படும் உத்தரவுச் சீட்டின் பேரில் இறக்குமதிசெய்யப்படும் சகல பொருட்களும், முழுவதும் ஐக்கிய இராச்சியத்தில், சனல் தீவுகளில் மான்தீவில் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். மேலதிக வேறு சாதனங்களுடன் பின்னிணைப்பு " ஆ " வில் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில, இவ்வுத்தரவுச் சீட்டின் பேரில் அனுப்பப்படும் பொருட்கள், பெறப்படும் சேவைகள் பற்றிய கொடுப்பனவு அறிவித்தல் ஒன்றும் அனுப்பும்படி அனுப்பு மதியாளர்கள் வேண்டப்படல்வேண்டும். இரசாயனப் பொருட்களும், இரசாயனச்சார்புடைய பொருட்களும் இறக்குமதிசெய்யப் படின் கொடுப்பனவு அறிவித்தல் பின்னிணைப்பு " அ " இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பெறப்படல் வேண்டும்.

கவனத்தில் குறித்துக் கொள்ளப்படவேண்டியது—

(i) " ஐக்கிய இராச்சியம்/இலங்கைக்கடன் 1970 " உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் செய்யப்படும் சகல இறக்குமதிகளும் நாணயக்கடிதத்தின் மூலமே செய்யப்படல் வேண்டும்.

(ii) " ஐக்கிய இராச்சியம்/இலங்கைக்கடன் 1970 " என்ற தலைப்பில் வழங்கப்படும் உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் பெறப்படும் சேவைகளுக் கும், வழங்கல்களும் ஐக்கிய இராச்சியம் சனல் தீவுகள் மான் தீவில் வியாபாரம் நடத்தும் நபர்களுக்கு மட்டுமே பவுணில் கொடுப் பனவுகள் செய்யப்படவேண்டும்

(iii) கொடுக்கல் வாங்கல்கள் வி. கா. கே. அடிப்படையில் இருக்குமிடத்து முழுத்தொகையும் கடனுக்குள் அடக்கப்படும். கப்பற்றுள மட்டும் இலவசம் (க. த. இ.) ஒப்பந்தங்கள் பற்றிய விடயத்தில் கப்பலேற்றுமதிபற்றிய ஒழுங்குகள் பிரித்தானிய வியாபாரத் தாபனம் ஒன்றுடன் செய்யப்படுவதுடன் இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் காப்புறுதி செய்யாத விடத்து, காப்புறுதி பற்றிய ஒழுங்குகளும் பிரித்தானிய வர்த்தகக் கொம்பனியொன்றுடன் செய்யப்படவேண்டும்.

என். டபிள்யு. எச். டி. குணரத்தின,
பதில் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டு அதிகாரி.

1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 6 ந உ.

பின்னிணைப்பு " அ"

**ஐக்கிய இராச்சிய/இலங்கைக்கடன் 1970 கொடுப்பனவு அறிவித்தல்**

(i) இக்கொடுப்பனவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனுப்பு பொருள் பட்டியலில் அல்லது அதன் பிரதியில் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளை நான் பெற்றுக்கொண்டேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| ஒப்பந்தகாரரின் பொருள் அனுப்பு பட்டியல் எண் | திகதி | தொகை | கொடுப்பனவு செய்த திகதி | வழங்கப்பட்ட பொருள், வேலை அல்லது சேவை யின் சுருக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) ஐக்கிய இராச்சியத்தைச் சேராத ஐக்கிய இராச்சியத்திலோ அல்லது வெளியிலோ கொள்வனவு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரினுல் பணம் கொடுக்கப்பட்ட அல்லது கொடுபடவேண்டிய பின்வரும் தொகை மேலேகுறிப்பிடப்பட்டுள்ள பொருள் அனுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

(க. த. இ. மதிப்பு) :————————.

பொருள்களின் விபரம் :————————.

(iii) இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை தவிர, முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், ஐக்கிய இராச்சியத்தைச்சேர்ந்த பொருட்களின் பேரிலும் சேவைகளின் பேரிலும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியன.

(அ) மேலே குறிப்பிடப்பட்டு இக்கொடுப்பனவு அறிவித்தலுடன் அனுப்பப்படும் பொருள் அனுப்புபட்டியலில் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்றும்,

(ஆ) கீழே சொல்லப்பட்டுள்ள ஒப்பந்தகாரரின் பேரில் இச்சான்றிதழுக்குக் கையொப்பமிட எனக்கு அதிகாரம் உண்டென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் :

கையொப்பம் : ————.
வகிக்கும் பதவி : ————.
எவரின் சார்பில் : ————.
ஒப்பந்தகாரரின் பெயரும் முகவரியும் : ————.
திகதி : ————.

குறிப்புகள் :

(அ) இப்பத்திரம் இரசாயனப் பொருட்களுக்கும் இரசாயனச் சார்புடைய பொருட்களுக்கும் மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும். இவை ஐக்கிய இராச்சிய இறுப்புப் பாகுபாட்டு அதிகாரங்கள் 15, 25, 28-35, 37-40 கீழ் உரிய உப தலைப்புகளின் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

(ஆ) கவனிக்கவும் :—

(i) எச். எம். சுங்கமும் உள்நாட்டுபொருள் இறுப்பும், எச். எம். எஸ். ஓ.
(ii) பிரசல்ஸ் நோமன் கிலேச்சர் இரசாயனப் பாகுபாடு, எச். எம். எஸ். ஓ.

(இ) (i) ஒரு பொருள் முழுவதும் ஐக்கிய இராச்சிய சுதேசப் பொருள்களைக் கொண்டோ அல்லது சரியான ஈ. எப். ரீ. ஏ. தரம் பிரிக்கும் முறையில் முழுவதும் அல்லது ஒருபகுதி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டோ, செய்யப்பட்டிருந்தால் அப்பொருள் ஐக்கிய இராச்சிய மூலமுடையது என்று கணிக்கப்படும்.

(ii) ஈ. எப். ரீ. ஏ. தரம் பிரிக்கும் முறைகள் ஏற்றுமதியாளர்களின் பாவிப்பிற்காக ஈ. எப். ரீ. ஏ. விளக்க அறிக்கையில் முதலாம் பட்டோலையில் தரப்பட்டுள்ளன. எச். எம். எஸ். ஓ.

(iii) இவ்வுறுதியுரை நோக்கங்களுக்கு " மாற்று வித அமைப்பு " பொருந்தாது என்று வலியுறுத்த வேண்டியுள்ளது.

(iv) மேலே குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் " பிரதேசமூலம் " என்ற சொற்கள் ஐக்கிய இராச்சிய மூலம் என்பதை மட்டுமே கருதும்.

(v) இவ்வுறுதியுரையின் நோக்கங்களுக்கு "அடிப்படை பொருட்பட்டியல்" (ஈ. எப். ரீ. ஏ. விளக்க அறிக்கை பட்டோலை iii) பொருந்தாது.

(vi) தொடர்புடைய பொருள்களுக்காய தரம் பிரிக்கும் முறை கொடுக்கப்பட்டில்லாத விடத்து, கடன் நிருவாகப் பகுதி நிதித் திணைக்களம், கடல் கடந்த அபிவிருத்தி அமைச்சு, எலாண்ட் ஹவுஸ், ஸ்ராக் பிளேஸ், லண்டன், எஸ். டபிள்யூ. 1 இல் ஆலோசனை பெறல் வேண்டும்.

இவ்வுறுதியுரையின் நோக்கங்களுக்காக ஐக்கிய இராச்சியம் என்பது சனல் தீவுகளையும் மான் தீவையும் உள்ளடக்கும்.

பின்னிணைப்பு அ1
(இரசாயனப் பொருள்கள்)

**ஐக்கிய இராச்சியம்/இலங்கைக் கடன் 1970**

இரசாயனப் பொருள்களுக்கும் இரசாயன சார்புடைய பொருள்களுக்கும் மட்டும் உரிய கொடுப்பனவு அறிவித்தல்.

(1) பொருளனுப்புப் பட்டியல் திகதி : ————.

பொருளனுப்பு
பட்டியல் எண் : ————.

| (2) கொள்வனவு செய்பவருக்கு வழங்கப் பட்ட பொருட்களின் விபரம் (குறிப்பு அ) | £ விலை | ஐக்கிய இராச்சியப் பாகுபாட்டு எண் (குறிப்பு ஆ) | பொருள் ஐக்கிய இராச்சிய மூலமுடையதா (குறிப்பு " இ " பார்க்கவும்) ஆம் அல்லது இல்லை என்று கூறவும் |
|---|---|---|---|
| | | | |

(3) கொள்வனவு செய்யவரினால் கொடுப்பனவு செய்யப்பட்ட முழுத்தொகை
பவுனில்—£ : ———— கொடுப்பனவு செய்த திகதி :————

(4) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரின் சார்பில் இச்சான்றிதழுக்கு கையொப்பமிட எனக்கு அதிகாரமுண்டு.

கையொப்பம் :————.
வகிக்கும் பதவி : ————.
எவரின் சார்பில் : ————.
ஒப்பந்தகாரரின் பெயரும் முகவரியும் : ————.

திகதி : ————.

இவ்வுறுதியுரையின் நோக்கங்களுக்காக ஐக்கிய இராச்சியம் என்பது சனல் தீவுகளையும் மான் தீவையும் உள்ளடக்கும்.

9-571.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது